
## திராவிடத்தால் வாழ்கிறோம்

887

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

18

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# கொள்கைக்கும் நிலைப்பாடுக்குமான வேறுபாடு!

கொள்கைக்கும் நிலைப்பாட்டுக்கும் இடையில் மலையளவு வேறுபாடு இருக்கிறது. கொள்கை முடிவு தீர்க்கமானது, ஆனால், நிலைப்பாடு என்பது சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்ப மாற்றிக்கொள்வது. இஸ்லாமியர்கள் விவகாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் எடுப்பது கொள்கை முடிவு. ஆனால், அ.தி.மு.க. எடுப்பதோ நிலைப்பாடு. சந்தர்ப்பவாத சூழலுக்கு ஏற்ப எடுக்கப்படுவது. அரசியல் அழுத்தத்திற்கு ஏற்ப மாற்றிக்கொள்வது (Political Convenience). குடியுரிமை திருத்தச் சட்டத்தில் அ.தி.மு.க.-வின் ஆதரவினால்தான் அதைச் சட்டமாக்க முடிந்தது. அப்போது பா.ஜ.க.-வின் கூட்டணியில் அ.தி.மு.க. இருந்தது. இடைப்பட்ட காலத்தில் நாடாளு மன்றத் தேர்தலுக்காக கூட்டணி விலகிய பின்பு, வக்ஃப் வாரிய திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது. அந்த சமயத்தில் கூட்டணி இல்லாததால் அ.தி.மு.க. எதிர்த்து வாக்களித்தது.

### தமிழ்நாட்டின் பொதுப்பண்பு

இப்படி எதிர்த்து வாக்களிப்பதால், சிறுபான்மைச் சமூகம் உடனடியாக அ.தி.மு.க.வை ஏற்றுக்கொண்டு வாக்குகளை அள்ளித் தந்துவிடாது என்பது அவர்களுக்கும் தெரியும். ஆனாலும், இஸ்லாமியர்களை அரவணைத்து அன்பைப் போற்றுவதே தமிழ்நாட்டின் பொதுப்பண்பு. அந்தப் பொதுப்பண்புக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க முடியாது என்ற அச்சம்தான், வக்ஃப் வாரிய திருத்த மசோதாவை எதிர்த்து, அ.தி.மு.க.-வை வாக்களிக்க வைக்கும் நிலைப்பாட்டை எடுக்கச் செய்தது.

வக்ஃப் வாரிய திருத்த மசோதாவும், குடியுரிமை திருத்தச் சட்டமும் இஸ்லாமியர்களின் நலனுக்குக் கேடானது என்று இந்தியாவின் பல மாநிலங்களில் அரசியல் கட்சிகள் புரிந்துகொள்வதிலேயே நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன. ஆனால், தமிழ்நாட்டிலோ தொலைதூர கிராமம் ஒன்றில், தேநீர் கடை முன்பு அமர்ந்து பத்திரிகை வாசிக்கும் சாமானியர் ஒருவருக்குக் கூட, இம்மசோதாக்கள் இஸ்லாமியர்களுக்குக் கேடானவை என்ற புரிதலோடு இருக்கும். அதுதான் தமிழ்நாட்டின் பொதுப்பண்பு.


திராவிட இயக்கத்தால் பண்படுத்தப்பட்ட நல்லிணக்கப் பொதுப்பண்பு அது. அதுதான் வாக்காகவும் மாறுகிறது. எனவேதான், நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்பதால், அந்தப் பொதுப்பண்பினைப் பகைத்துக்கொள்ள வேண்டிய நெருக்கடி அ.தி.மு.க.-வுக்கு ஏற்படவில்லை. அதுமட்டுமின்றி, வாக்குகளை இழந்துவிடக்கூடாது என்ற அச்சமும் தொற்றிக் கொள்ளவே, வக்ஃப் வாரிய திருத்த மசோதாவை ஆதாயத்தின்பேரில் அ.தி.மு.க. எதிர்த்தது. ஒருவேளை அப்போதும் பா.ஜ.க. கூட்டணி இருந்திருந்தால், அ.தி.மு.க.-வுக்கு இம்முடிவை எடுத்திருக்கக்கூடிய துணிச்சல் இருந்திருக்காது. அதனால்தான் இதை சந்தர்ப்பவாத நிலைப்பாடு என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். இதுதான், தேர்தலுக்குத் தேர்தல் அந்தக் கட்சியின் நிலை.

ஆனால், சிறுபான்மையினர் விவகாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருப்பது தீர்க்கமான கொள்கை முடிவு. நிலைப்பாடுகளை காலத்துக்கேற்ப மாற்றிக்கொள்வதைப் போல, கொள்கையை உடனுக்குடன் மாற்றிக்கொள்ள முடியாது. ஆட்சியில் இருந்தாலும் இல்லா விட்டாலும், எந்தக் கூட்டணியில் இருந்தாலும் அதைப் பற்றி கவலைப்படாமல், சிறுபான்மை யினர் நலன் பற்றி கவலைப்படக்கூடிய சிந்தனையை கொள்கை முடிவுதான் தருகிறது. இஸ்லாமியர்கள் விவகாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கும் கொள்கைப் பற்றும், அதில் காட்டும் உறுதியும் இதை நிரூபித்துக்கொண்டே இருக்கின்றன. அதற்கு சமீபத்திய உதாரணம் வக்ஃப் வாரிய திருத்த மசோதா.

### வக்ஃப் நிலம் என்றால் என்ன?

'வக்ஃப்' என்ற அரபு வார்த்தைக்கு 'தான மாக்கப்பட்டு, அல்லாஹுக்கே சமர்ப் பிக்கப்பட்டது' என்று அர்த்தம். இஸ்லாமிய சமய நம்பிக்கையின் அடிப்படையில், ஒரு தனிநபரோ, குடும்பமோ பொது நன்மைக்காக அல்லது மதப் பயன்பாட்டிற்காக நிரந்தரமாகத் தானமாக்கிய சொத்துகள் இவை. மசூதிகள், மதரஸாக்கள், கபர்துகள் (கல்லறைகள்), ஏழைகளுக்கான இருப்பிடங்கள் இந்நிலங்களில் ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இந்தியாவில் ஒட்டுமொத்தமாக 8 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான, சுமார் 6 லட்சம் வக்ஃப் சொத்துக்கள் உள்ளன. இந்நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் வணிக ரீதியான பயன்பாட்டுக்கு வாடகைக்கு விடப்படுவதன் மூலம் கிடைக்கும் வருவாயும் சமூக நலப் பணிகளுக்காகவே செலவிடப் படுகிறது. இந்த வக்ஃப் நிலங்களைப் பராமரிக்க ஒன்றிய மற்றும் மாநில அளவில் வக்ஃப் வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்த நிலங்களைக் குறிவைத்துதான் வக்ஃப் வாரிய திருத்த மசோதாவை உருவாக்கியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அண்டை நாடுகளில் இருந்து அகதிகளாக வரும் இஸ்லாமியர்களை மனிதாபிமானத்துடன் அணுகாமல், அவர்களுக்கான வாழ்வாதார வாய்ப்பையே முறிக்கும் வகையில், உரு வாக்கப்பட்டது குடியுரிமை திருத்தச் சட்டம் என்றால், இந்தியாவில் நூற்றுக்கணக்கான ஆண்டாக இஸ்லாமியர் வசம் இருக்கும் நிலங்களைப் பறிப்பது வக்ஃப் வாரிய திருத்த மசோதாவின் நோக்கம்.




> மக்களவையில் வக்ஃப் மசோதா தாக்கல் செய்யப்பட்ட நாளிலேயே மிகக் கடுமையாக எதிர்த்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

### பா.ஜ.க. மேற்கொண்ட திருத்தங்கள்

'வக்ஃப்' வாரிய சொத்துகளை ஒழுங்கு படுத்துவது என திருத்த மசோதா ஒன்றை 2024-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மக்களவை யில் தாக்கல் செய்தது பா.ஜ.க. அரசு. ஆனால், அதில் கூறப்பட்டிருந்த திருத்தங்கள் யாவும், இந்தியாவின் மதச்சார்பின்மைக்கு சவாலாக இருந்தன. அதனால் தி.மு.க., காங்கிரஸ் கட்சிகள் இதனை ஒரு குறிப்பிட்ட மதத்தின் பிரச்னை என்ற அளவில் சுருக்கிப் பார்க்கவில்லை. வக்ஃப் வாரியத்தில் முஸ்லிம் அல்லாத பிற மதத்தவரும் உறுப்பினராக இடம்பெறுதல், வக்ஃப் சொத்து தொடர்பாக ஆட்சியர் ஆய்வு செய்தல் போன்ற சர்ச்சைக்குரிய திருத்தங்கள் அதில் இருந்தன. குறிப்பிட்ட ஒரு வக்ஃப் நிலத்துக்கு எதிராக யாரேனும் வழக்கு தொடர்ந்தால், அந்த வழக்கு முடியும்வரை அந்த நிலம் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும். வழக்கின் தீர்ப்பைப் பொறுத்தே அந்த நிலம் மீண்டும் வக்ஃப் வாரியத்திடம் செல்லுமா அல்லது இல்லையா என்பது தெரிய வரும்.

பாபர் மசூதி தீர்ப்புக்குப் பிறகு, இந்தியாவில் பல மாநிலங்களில் மசூதிகளுக்கு உரிமை கோருவது தொடர் கதையாகிக் கொண்டு வரும் இவ்வேளையில், இப்படியொரு திருத்தத்தை முன்மொழிவதற்குள் உள்ள ஆபத்தை எவராலும் எளிமையாக உணர்ந்துகொள்ள முடியும். அதனால்தான் மக்களவையில் மசோதா தாக்கல் செய்யப்பட்ட நாளிலேயே மிகக் கடுமையாக எதிர்த்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

### மனித இனத்துக்கே எதிரானது!

கழகத்தின் துணைப்பொதுச் செயலாளரும் மக்களவைத் குழுத் தலைவருமான கனிமொழி அவர்கள், நாடாளுமன்றத்தில் இந்த மசோதா குறித்து பேசும்போது, 'முதல் நாடாளுமன்றக் கூட்டத்துக்கு வரும்போது எதிர்க்கட்சி எம்.பி-க்கள் கையில் அரசியல் சாசன சட்டப் புத்தகத்தை எடுத்து வந்தார்கள். அதன் நோக்கம் அரசியல் சாசனத்தைக் காக்க வேண்டும் என்பதுதான். ஆனால், தற்போது நாடாளுமன்றம் அரசியல் சாசனத்துக்கு எதிராக நடந்துகொண்டிருக்கிறது. தற்போது கொண்டுவரப்படும் வக்ஃப் வாரிய சட்டத் திருத்தம் அரசியல் சாசனம், கூட் டாட்சித் தத்துவம், மதச் சுதந்திரம், சிறு பான்மையினர், மனித இனத்துக்கே எதிரானது. இந்து, கிறிஸ்துவர்களுக்கான அமைப்பின் நிர்வாகத்தில் பிற மதத்தவர் உள்நுழைய முடியுமா? அந்த மத நம்பிக்கை இல்லாதவரை எப்படி அதனுள் அனுமதிப்பீர்கள்... வக்ஃப் வாரியத்தில் இஸ்லாமியர் அல்லாதவர் உறுப்பினராக முடியும் என்பது மதச் சுதந்திரத்துக்கு எதிரானது. எதற்காக ஒரு மதத்தின் உரிமையில் மற்றொரு மதத்தினர் தலையிட வேண்டும்? என கேள்வி எழுப்பினர்.

வக்ஃப் சொத்துகள் குறித்து மாவட்ட ஆட்சியர்கள் ஆய்வுசெய்து முடிவெடுக்கலாம் என்பது தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தும். இது ஏற்கத்தக்கதல்ல. எனவே, இந்த வக்ஃப் வாரிய சட்டத் திருத்தம் மனித இனத்துக்கே எதிரானது. சிறுபான்மையினருக்கு அரசியல் சாசனம் வழங்கிய பாதுகாப்பை இது நேரடியாகத் தகர்க்கிறது" என்கிற அவரது எதிர்ப்பு கழகத்தின் குரலாக நாடாளுமன்றத்தில் எதிரொலித்தது.

...நீளும்

## பா.ஜ.க. உருவாக்க விரும்பும் இந்தியா!

உத்தரப் பிரதேச மாநிலத்தில், எட்டவா மாவட்டத்தில் ஆன்மிகச் சொற்பொழிவில் ஈடுபட்டு வந்த முகுந்த் மணி சிங் யாதவ் மற்றும் அவரது உதவியாளர் சந்த்குமார் ஆகியோரை பார்ப்பன இளைஞர்கள் தாக்கியதுடன், முகுந்த் மணியின் தலைமுடியை மொட்டையடித்து அவமானப்படுத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலுக்குக் காரணம் 'பார்ப்பனர் அல்லாதவர்கள் ஆன்மிகச் சொற்பொழிவில் ஈடுபடக் கூடாது' என்பதுதான். குறிப்பாக, "அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், ஆனால், யாதவ சமூகம் என கூறிக்கொண்டு ஆன்மிகச் சொற்பொழிவில் ஈடுபடுகின்றனர்" எனக் கூறி தாக்கியுள்ளனர். இந்த சம்பவத்தில் 'தாங்களும் இந்துக்கள் எனக் கூறிக்கொள்பவர்கள்கூட, இந்து மதச் சொற்பொழிவில் ஈடுபடக்கூடாது' என்பதுதான் அந்த கிராமத்தைச் சேர்ந்த பார்ப்பனர்கள் வைத்த வாதம். இதையே அங்குள்ள உயர்சாதி பா.ஜ.க.வினரும் கூறுகின்றனர். 'பிராமணர்கள், சத்திரியர்கள், யாதவர்கள், விஸ்வகர்மாவினர் என அவரவருக்கென பணிகள் உள்ளன. இந்தச் சூழ்நிலையில் ஒரு சமூகத்தின் பணிகளை மற்ற சமூகங்கள் செய்யக்கூடாது' எனவும் கூறியிருக்கின்றனர்.

இந்த சம்பவத்தை சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்ட பலரும் கண்டித்துள்ளனர். "சமூக ஆக்கிரமிப்பாளர்கள் இதர சமூகத்தின் கலைஞர்களையும் விட்டுவைப்பதில்லை. உ.பி.யில் 90 சதவிகித சமூகத்தினர் கொண்ட தலைநகரம் ஒரு சதவிகிதத்தினரிடம் சென்றது எப்படி?" என அகிலேஷ் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

இந்த நிலையில், சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேநேரத்தில் ஆன்மிகச் சொற்பொழிவாளர் முகுந்த் மணி மீதும் பாலியல் குற்றம் மற்றும் பிராமணர் என பொய் கூறியதாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுதான் பா.ஜ.க. உருவாக்க விரும்பும் இந்தியா. பெரும்பான்மை இந்து மக்களும் உரிமை பெற்றவர்களாக இருக்க முடியாது. இப்போது உ.பி. மக்களும் இதை உணரத் தொடங்கி இருக்கின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவருடன் தொண்டர் அணியாக என் தந்தை!



தி.சிவசுந்தரம்

1994-ஆம் ஆண்டு எனது தந்தை சிவ.தியாகராஜன் அவர்கள் தொண்டர் அணியில் இருந்தபோது, நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை வரவேற்று சிறப்பு செய்தார். அப்போது, அவருடன் மேடையில் நின்று எடுத்துக்கொண்ட புகைப்படம் இது, எனக்கு இயக்கப் பணியாற்ற ஊக்கமாக இருக்கும் படமும் இதுதான். உடன் அன்றைய மாவட்டப் பொறுப்பாளர் அ.அம்பலவாணன், வழக்கறிஞர் செ.குப்புசாமி, சோழன் க.சங்கர், செம்பை மதிவாணன் ஆகியோர் உள்ளனர்.

– தி.சிவசுந்தரம்,
ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்,
வடக்குப் பொய்கைநல்லூர்
நாகப்பட்டினம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அடிக்கல்நாட்டு விழா!

05.05.1940-இல் இந்தி எதிர்ப்புப் பிரச்சார நிதி கமிட்டி சார்பாக நடராசன், தாளமுத்து நினைவிடத்தில் அடிக்கல்நாட்டு விழா நடைபெற்றது. அங்கு உரையாற்றிய பெரியார், "நடராசன், தாளமுத்துவின் சேவையையும், உணர்ச்சியையும் தமிழர்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்த்தால், அவர்களின் சுயநலமற்ற தியாகம் விளங்கும். அவ்வீரர்களின் தியாகத்தைப் பின்பற்றி நாம் உழைக்க வேண்டுமென்பதற்கான அடையாளம்தான் இந்த ஞாபகார்த்த கட்டடம்" என்றார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131